எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி செய்தால், அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அங்கே தவறு நடக்கிறது என்ற குறிப்பு, விவரங்கள் அரசுக்கு வந்திருக்கிறது.

நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஊதியம்.

* வினா எண். 325 திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நிதி உதவி பெற்று நடந்துவரும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசே நேரிடையாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதை பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அவ்வப்போது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(ஆ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரிடையாக ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையில் ஆசிரியர்களுக்கு பல் வேறு சங்கடங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. என்றாலும், அப்பேர்ப்பட்ட முறையீடுகளைத் தவிற்கவும், அதிலே ஏற்படக்கூடிய முறைகேடுகளைப் போக்குவதற்கும், அரசு அவர்களுக்கு சம்பளத்தை பாங்கு சிஸ்டம் மூலம் செக்கை அவர்களுக்கு நேரடியாகக் கொடுத்து, சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு நாம் நேரடியாக ஊதியம் தந்து வருகிறோம். தங்களு

டைய சம்பளத்தை பாங்கியிலே அவர்களுடைய கணக்கிலே மாதாமாதம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. எனவே அவர்கள் சம்பளத்தை நேரிடையாகச் சென்றுகூட வாங்க வேண்டியதில்லை. அவர்களுடைய கணக்கில் வரவு வைக்கப்படுகின்ற அளவிலே ஒரே செக்காக கல்லூரியிலிருந்து பாங்கிக்கு அனுப்பப்பட்டு, அந்தந்த ஆசிரியர்கள் கணக்கில் வைக்கப்படும். ஆசிரியர்கள் ஒரு இடத்திற்குச் சென்று, நின்று அவர்கள் சம்பளத்தை வாங்க வேண்டிய நிலை இப்போது கல்லூரிகளிலே இல்லை. கல்லூரிகள் குறைந்த அளவிலே இருக்கின்ற காரணத்தால், சுலபமான முறையிலே, நிர்வாக அடிப்படையிலே நாம் அதை அமுல் நடத்தி வருகிறோம். இதையே உயர்நிலைப் பள்ளி, மற்றப் பள்ளிகள் என்று வருகின்ற போது, பெருமளவில் இதிலே நிர்வாக சிக்கல்கள் ஏற்படும். அதையும் பரிசீலனை செய்து வருகிறோம். இப்போது அதற்கான நடவடிக்கைகயைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற ஒன்றியப் பள்ளிகளில் இதுபோன்று ஊதியம் வழகுவதற்கென்று சில ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டு, பே தினத்தன்று இரண்டு நாட்களும், அந்த பேயை டிஸ்பர்ஸ் செய்வதற்கு என்று இரண்டு நாட்களும் எடுத்துக் கொள்வதால், கல்வியில் ஒழுங்காக கவனம் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதுபோன்ற அரசு பள்ளிகளிலே வேறு வகையிலே நேரடியாக ஊதியம் வழங்குவதற்கு உரிய முறையை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி தனியார் பள்ளிகளைப் பொறுத்தது. தனியார் பள்ளிகளில் சம்பளம்கொடுப்பதில் சில முறைகேடுகள் இருக்கின்றது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த அளவில், சம்பளம் தருகின்ற போது குறைத்துத் தருவதும், கொஞ்சம் எடுத்துக் கொண்டு தருவதும் போன்ற முறைகேடுகள் இருக்கின்ற காரணத்தால், இந்த நேரடி உதவி செய்யும் பிரச்சினை வந்தது. சர்க்கார் பள்ளிகளில் இந்த நிலை இருக்க நியாயமில்லை. சர்க்கார் பள்ளிகளில் ஒரு ஆசிரியர் போய் பணம் வாங்கிக் கொண்டு வருவதும், தருவதும் இருக்கத்தான் செய்யும். நேரடி உதவி செய்து தர வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளிகள் இருக்கும் இடங்களில் பாங்கிகள் இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளி உள்ள இடங்களில் எல்லாம் பாங்கு இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவைகளையெல்லாம் வைத்துத்தான் இதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9—30)

திரு. எல். இளையபெருமாள்:—மாண்புமிகு தலைவர் அவர்களே, சில தனியார் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் சம்பளத்தினால் ஏற்பட்ட தகராறு காரணமாக நிறுவனங்களிலிருந்து நீக்கப்பட்டு அவர்கள் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். அரசாங்கமும் அவர்களது கோரிக்கை நியாயமானது அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இருந்தும் வேலை கொடுக்காமல் அவர்களுக்கு சம்பளத்தையும் கொடுக்காத நிலை இருக்கிறது. மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்ற பெயராலே இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். வருங்காலத்தில் இவ்வாறு நடக்காமல், அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தும் அவர்களை வேலையில் அமர்த்தாவிட்டால் அரசாங்கமே வேறு பள்ளிகளில் அவர்களுக்கு வேலை கொடுத்து ஆதரவு காட்ட அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் போட்ட உத்தரவை அமுல் படுத்துவதற்கு தான் முதலிலே முயற்சி எடுத்துக் கொள்வோம். பிறகு மாற்று ஏற்பாடுகளைப் பற்றிப் பேசலாம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே நேரடியாக சம்பளம் கொடுப்பதற்கான நிர்வாகப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பரிசீலித்து முடிவு செய்வோம் என்று அமைச்சர் சொன்னார். அது சிறிது காலம் பிடிக்கும் என்பதாலே உடனடியாக அவர்களுக்கு இருக்கக் கூடிய சம்பளம் முழுமையாக கிடைப்பதற்கு இடைக்கால ஏற்பாடு ஏதாவது செய்வார்களா? அவர்களுக்கு குறைச்சலாக சம்பளம் கொடுத்து அதிகமாக கொடுத்ததாக ரசீது பெற்றிருக்கிறார்கள். கிரிமினல் பிராசிகியூஷன் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிரிமினல் பிராசிகியூஷன் என்று நாம் போகிற போது ஆசிரியர்கள் கையெழுத்துப் போடாமல் இருக்க வேண்டும். கையெழுத்துப் போட்டு வாங்கியிருக்கிறார் அதிலே வேறு பல சங்கடங்கள் வருகின்றன. இப்போது எங்களுக்கு ஏதாவது புகார் வருமானால் அதை உடனடியாக விசாரித்து

1982 மார்ச் 3]

அப்படிப்பட்ட பள்ளிகளிலே நேரடியாக ஊதியம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்களை தவறு செய்கிற நிறுவனங்கள் என்று கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்கிற முறை இப்போது இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது முழுச் சம்பளம் நாமே தருகிற காரணத்தால் எல்லா பள்ளிகளிலும் புகார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நேரடியாக தருவதற்கு இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். முதலிலே ஒரு மாவட்டத்திலே பரிசீலித்துப் பார்க்கலாம் என்று ஒரு கருத்து இருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்து அந்தத் திட்டத்தை அமுல் நடத்தி, அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்ற யோசனை இப்போது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது

திரு. டி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சம்பளம் நேரடியாக அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தும் தெற்கு பாலவிளை என்ற இடத்தில் ஆசிரியர்கள் ஆறு மாத காலமாக சம்பளம் கிடைக்காமல் நீதிமன்றங்களுக்குச் சென்று தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் புகார்கள் எல்லாம் தந்திருக்கின்றார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறுமாத சம்பளம் கிடைக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகிற போதே நீதிமன்ற தடையுத்தரவு இருக்கிறது என்று சொன்னார்கள். அதை மீறி ஏதாவது செய்தால் நாம்தான் பதில் சொல்லவேண்டி வரும்.

**காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 326.—திரு. து. புருஷோத்தமன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறதா!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.